தமிழ்ச்சிட்டு

சிறுவர்
கலை இலக்கியத்
திங்களிதழ்

குரல் - 23
இசை - 6

பள்ளிக்குப் போ !



பள்ளிக் கூடம் திறந்தது!
பையைத் தூக்கிக் கொள்ளுவாய்
வெள்ளைச் சட்டை போடுவாய்!
விரைந்து சென்று கூடுவாய்!

கன்று போல ஆடிப் போ!
காக்கைப் பாட்டுப் பாடி வா!
ஒன்று இரண்டு கற்று வா!
உரல் ஊஞ்சல் எழுதி வா!

ஒழுக்கம் அன்பு கற்று வா!
உடற் பயிற்சி பெற்று வா
அழுக்கு நெஞ்சைத் தூய்மை செய்!
அடக்கம், அமைதி வாய்மை வை!

பாட்டும் கதையும் படித்து வா!
பண்பைக் கடைப் பிடித்து வா!
நாட்டுப் பற்றை வளர்த்து வா
நமது மொழியைக் கற்று வா!

மின்சாரம் !



விசையைத் தட்டி விட்டதும்
விளக்குப் பற்றிக் கொள்ளுமாம்!
விசையைத் திருப்பி வைத்ததும்
வாய்திறந்து பேசுமாம்!

விசையை முடுக்கி விட்டதும்
விசிறி நன்கு சுழலுமாம்!
விசையைக் காதில் வைத்ததும்
விளம்பும் பேச்சு கேட்குமாம்!

கம்பிக் குள்ளே செல்லுமாம்!
கையில் தொட்டால் கொல்லுமாம்!
தம்பி அதுபேர் ‘மின்சாரம்‘
தண்ணீர் தந்த விசையாகும்!

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

– பாவலரேறு

குரல் : 23, இசை : 6

தென்மொழி
ஆடவை 2031(சூன் 2000)
இதழின் இணைப்பு

நிறுவனர்
பாவலரேறு
பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்:
தாமரை பெருஞ்சித்திரனார்

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
'தென்மொழி'
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை - 601 302
தொலைபேசி எண் : 239 0231

விளையாட்டு

குழந்தைகளாக இருக்கிறபோது நமக்குத் தாயின் மடிதான் உலகமாகிப் போனதில்லையா?

அதன் பிறகு ஆசிரியர்கள் சொல்பவைதாம் மறைமொழி. அதை மீற நாம் எண்ணியதில்லை.

நம் விளையாட்டுகள்கூடக் காலத்தால் ஒவ்வொருவரையும் சார்ந்தனவாகவே இருந்தன.

பள்ளிக்கூடம் போவதற்கு முன்பு வரை நாமும் செப்பு வைத்து விளையாடிக் கொண்டுதானிருந்தோம். பின்னர் ஆசிரியர் மாணவர் விளையாட்டுகள் நமக்குள் நாமே ஆசிரியர்களாய் நின்று சொல்லிக் கொண்டிருந்ததுகூட ஒரு காலத்தில் நடந்து கொண்டிருந்தது.

அதன் பின்னர் திருடன், காவல்காரன்-கண்டுபிடிப்பு விளையாட்டு- இப்படி நம் விளையாட்டுகளிலும் வளர்ச்சிகள் ஏற்படுகின்றன.

எனவே விளையாட்டுகள்கூட நாம் எதைச் சார்ந்து இயங்கின்றோமோ அதைச் சார்ந்ததாகவே இருக்கிறது.

இருந்தாலும் போர் முனையில் இருக்கின்ற குழந்தைகள் யாவும் இப்படி விளையாடுவதில்லை.

அவர்களெல்லாம் தாம் படைதுறையினர் என்றும், தாம் விடுதலைப் போராளி என்பதாகவும் தங்கள் விளையாட்டுகளை அமைத்துக் கொள்கின்றனர்.

அதுமட்டுமல்லாமல் அரசும், பள்ளிக் கூடங்களும் நமக்குச் சில விளையாட்டுகளைச் சொல்லித் தருகின்றன.

மட்டைப்பந்து (கிரிக்கெட்) விளையாட்டைப் பெருமளவில் விளம்பரப்படுத்துகிறது அரசு.

குமுகச் சூழலை மறுத்து விளையாட்டுகள் அமைவதில்லை. அப்படி நாமும் நம் குமுகத்தைச் சார்ந்த விளையாட்டு நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும்தானே.

நம் சிறு உள்ளங்களுள் சாதியற்ற, மதமற்ற, ஏற்றதாழ்வற்ற உணர்வுகளை வளர்க்கிற விளையாட்டுகள்தாமே தேவை.

நம் சிறுவர் கூட்டத்துக்குள் ஒருவன் பூணூல் அணிந்துக்கொண்டு வேறுப்பட்டு நின்றால் அதை நாம் மறுக்கச் சொல்ல வேண்டுமில்லையா?

மத அடையாளங்களுடன் நமக்குள் பிளவுகளை ஏற்படுத்துகிற நம் குடும்ப நடைமுறையை மாற்றவேண்டும்தானே.

ஆக, விளையாட்டுகள் நம் பொழுது போக்கிற்கு மட்டுமல்ல - அவை நம்மை ஒற்றுமைப்படுத்த, உரம்பெறவைக்க வல்லவை.

விளையாட்டுகளும் நம் அறிவை வளர்க்கத் தானே அல்லாமல், நம் அறிவை மழுங்கடிப்பதற்கல்ல.

எனவே அறிவை வளர்க்கின்ற விளையாட்டுகளையே விளையாடவேண்டுமன்றோ.

சொல்லடை விடை

1 சு	மை	யு	ந்	6 து
ல்	2 ஆ	டு	து	றை
ர்	தி	3 கு	ட்	மு
தி	று	டு	ட்	4 க
ளை	வ	5 ச	ம	ம்

வான்கோழி

இன்றைக்கு வளர்ப்புப் பறவைகளுள் வான்கோழியும் ஒன்றாகிவிட்டது. இதன் இறைச்சிக்காக இதைப் பல நாடுகளிலும் பண்ணை வைத்து வளர்க்கிறார்கள்.

முன்காலத்தில் அமெரிக்காவில் இருந்த காட்டுப் பகுதியில் இவை காட்டுப் பறவைகளாக வாழ்ந்தன. இந்நாட்டிற்குச் சென்ற இசுபானியர்கள் இவற்றைத் தம் நாட்டிற்குக் கொண்டு சென்றனர்.

தமிழகத்தின் கான மயிலாடக் கண்டு அமெரிக்க வான்கோழி தானும் அதுபோல் ஆட எண்ணிப் பயின்றதோ என்னமோ! வளர்ப்பு வான்கோழி காட்டு வான்கோழியைக் காட்டிலும் சிறியதாயும் பெண் வான்கோழியைக் காட்டிலும் பெரியதாயும் இருக்கும். பொன்னிறமாக இருக்கும் வான்கோழியின் இறக்கைகளில் கருப்புக் கோடுகளும், செந்நீல, பச்சைப் புள்ளிகளும் காணப்படும். இறகின் நுனி வெள்ளையாக இருக்கும்.

முற்றிலும் வெள்ளை இறகுகளைக் கொண்ட வான்கோழிகளும் உண்டு.

வான்கோழியின் தலையிலும், கழுத்திலும் சிவப்பு நிறத் தசை வளர்ந்திருக்கும்.

ஆண் பறவையின் மார்பில் சிறிய குஞ்சமொன்று இருக்கும்.

காய், கனி, கொட்டை, தவசங்கள், புழு, பூச்சி முதலியவற்றை வான்கோழி உணவாக உண்ணும்.

காட்டு வான்கோழிகள் உருவில் பெரியவை. அடர்ந்த காடுகளில் இவை கூட்டங் கூட்டமாக வாழ்கின்றன. பெண்கோழி இடும் முட்டைகளை ஆண் பறவை கொத்தித் தின்றுவிடும்.

சில பொழுதுகளில், குஞ்சுகளைக்கூடத் தின்றுவிடுவது உண்டு.

அதற்காகப் பெண்பறவை புதர்களுக்கிடையே, மறைவான இடங்களில் கூடு கட்டுவது வழக்கம்.

கதிரவ மண்டலம்

"இதுவரை நாம் இப்புடவியில் உள்ள விண்மீன்கள் பற்றியும், விண்மீன் குழுக்கள் பற்றியும்,விரிவாகத் தெரிந்து கொண்டோம் இல்லையா? இனி நாம் கதிரவ மண்டலத்தைப் பற்றித் தெரிந்து கொள்வோமா?" என்றார் நம்பியின் தந்தை.

குழலியும், எழிலும், இளங்கோவும், நம்பியும் மிகவும் ஆர்வத்துடன், "சரிங்கய்யா. சொல்லுங்கள். மிகவும் மகிழ்ச்சி"- என்றனர்.

"நம்முடைய பால்வெளி மண்டலத்துள் மிகச் சிறிய துணுக்குப் போன்றதே நம் கதிரவ மண்டலம். நம்முடைய கதிரவ மண்டலம் தனக்குத் தானே சுற்றிக் கொள்வதோடு அல்லாமல், பால்வெளி மண்டலத்தையும் சுற்றி வருகின்றது. அப்படி ஒருமுறை சுற்றி வருவதற்கு இருபது கோடி ஆண்டுகள் ஆகின்றனவாம்.

கதிரவ மண்டலத்துள் தலைமையானது கதிரவனே.

ஏறத்தாழ, ஓர் இலக்கம் ஒளி ஆண்டு பரப்புடைய பால்வெளி மண்டலத்தின் தடிமன் 13ஆயிரம் ஒளிஆண்டு அளவினது.

அப் பால்வெளி மண்டலத்தின் நடுஅச்சிலிருந்து கதிரவ மண்டலம் ஏறத்தாழ, இருபத்து ஏழாயிரம் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளதாம்.(ஓர் ஒளி ஆண்டு என்பது கோடிக்கோடி அயிர மாத்திரி தொலைவுடையது என்பதை நாம் முன்பே அறிந்திருக்கிறோம் இல்லையா?)

இக் கதிரவ மண்டலத்தின் நடுஅச்சு கதிரவனே. அக் கதிரவனை அச்சாகக் கொண்டு ஒன்பது கோள்கள் சுற்றி வருகின்றன.

கதிரவனுக்கு மிக அருகில் அறிவனும், அதன் பின், வரிசையாக வெள்ளி, நாம் வாழும் உலகம், செவ்வாய், வியாழன், காரி, விண்மம்(யுரேனசு), நெடுமம் (நெப்டியூன்), சேண்மம (புளூட்டோ)

ஆகியவை உள்ளன.

கதிரவ மண்டலத்துள் இவ் ஒன்பது கோள்கள் அல்லாமல் இக்கோள்களின் துணைக் கோள்கள் என்கிற நிலவுகள் உள்ளன.

அதே போன்று காரிக் கோளைச் சுற்றிலும் குப்பைக் குவியல் போன்று இலக்கக் கணக்கான விண்கற்கள் உள்ளன.

அவ்விண்கற்களைக் 'குட்டிக் கோள்கள் - என்றுகூடச் சொல்லலாம்.

ஏனென்றால், அவற்றுள் ஒவ்வொன்றின் அகலமும் ஏறத்தாழ ஆயிரம் அயிரமாத்திரி யுடையதாகுமாம்.

இவையெல்லாம் அல்லாமல், இக் கதிரவ மண்டலத்தில் உள்ள வால் விண்மீன்களின் வாலாகக் காட்சியளிக்கக் கூடியவை, உறைவளியும், கல்போன்ற திண்மப் பொருளுமே ஆகும்.

அவை குட்டிக் கோள்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் பன்மடங்குடையதாகும்."

-என்று நம்பியின் தந்தை அடுக்கிக் கொண்டே சென்றார்.

குழலி தன் ஆர்வத்தை அடக்க இயலாமல், நம்பியின் தந்தையையும் வானவெளியையுமே மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தமிழ் மண்ணின் பழமொழிகள் சில----

- அடித்த ஏருக்கும், குடித்த கூழுக்கும் சரி.
- அதிர அடித்தால் உதிர விளையும்.
- அழுது கொண்டிருந்தாலும் உழுது கொண்டிரு.
- ஆற்றை அடுத்த வயலும், அரசனை அடுத்த குடியும் முன்னுக்கு வரா.
- உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது.
- சேற்றோடு போவது நாற்றோடு போகட்டும்.
- மதகடி நன்செய்யும், மலையடிப் புன்செய்யும்.
- வரப்பு உயர்ந்தால் நெல் உயரும்-
- நெல் உயர்ந்தால் சொல் உயரும்.
- விதை ஒன்று போட சுரை ஒன்று முளைக்குமா?
- விளையும் பயிர் முளையிலே தெரியும்.

நாற்படை

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை எலலோருக்கும் விளையாடுவதில் விருப்பம் உண்டு. மனமகிழ்ச்சிக் காகவும், உடற்பயிற்சியாகவும், பொழுது போக்காகவும் பற்பல விளையாட்டுகள் விளையாடப்படுவதைக் காண்கிறோம். ஓடியாடி விளையாடும் விளை யாட்டுகள் போல் அல்லாமல், இருந்த இடத்தில் இருந்தபடியே விளையாடும் சிந்தனை விளை யாட்டுகளும் பல உண்டு. அத்தகைய விளையாட்டுகளில் போர்க்கள அமைப்பைக் கொண்ட 'நாற்படை' விளையாட்டும் ஒன்று. நடைமுறையில் பழங்காலத்தில் இருந்த யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை நான்கு வகையான படைகளே நாற்படை ஆகும். இந்நாற் படையைச் சதுரங்க சேனை என்பார்கள். இச் சேனையை அடிப்படையாகக் கொண்டதே இப்போது 'சதுரங்கம்'

என்றும் 'செஸ்' என்றும் கூறப்படும் நாற்படை. விளை யாட்டுகளில் ஒன்றான நாற்படை, இன்று கணிப்பொறியிலும் இடம் பெற்றுள்ளது.

போர்க்களம் போன்ற இவ விளையாட்டின் ஆடுகளம் சதுரவடிவமான அறுபத்துநான்கு கட்டங்களைக் கொண்டது. ஒவ்வொரு வரிசையிலும் எட்டுக் கட்டங்களாக எட்டு வரிசைகள் அமைந்துள்ளன. அடுத்தடுத்துள்ள ஒவ்வொரு கட்டமும் கருப்பும் வெள்ளையுமாக மாறி மாறி இருக்கும். எதிர் எதிரான இருபக்கத்திலும் முதல் இருவரிசை களில் உள்ள பதினாறு கட்டங்களிலும் படைகள் நிறுத்தப்பட்டிருக்கும். ஒரு பக்கப் படை கருப்பாகவும் மறு பக்கப் படை வெள்ளையாகவும் இருக்கும்.

முன் வரிசையிலுள்ள எட்டுக் கட்டங்களிலும் காலாட்படை நிற்கும். ஊர்தி ஏதும் இல்லாமல காலால் நடந்தும் ஓடியும் தாக்கும் ஆள்களாகிய வீரர்களின் அணியே காலாட் படையாகும். பின் வரிசையின் இரு ஓரத்திலும், அதாவது முதற்கட்டம், எட்டாவது கட்டம் ஆகிய இரு கட்டங்களிலும் யானைப் படையும் இரண்டாவது கட்டத்திலும் ஏழாவது கட்டத்திலும் குதிரைப்படையும்,

மூன்றாவது கட்டத்திலும், ஆறாவது கட்டத்திலும் தேர்ப்படையும் நிற்கும். நான்காவது கட்டத்தில் அரசனும் ஐந்தாவது கட்டத்தில் அமைச்சரும் நிற்பர்.

படை உறுப்புகளின் வடிவங்கள் "காய்கள்" எனப்படும்.

எதிரி அரசனை, எந்தப் பக்கமும் செல்ல முடியாத சிறைப்படுத் துவதே ஆட்டத்தின் வெற்றியாகும்.

பழந்தமிழர் போர் முறைகளை அடிப்படையாகக் கொண்ட இந்நாற்படை விளையாட்டு, மேலை நாடுகளுக்குச் சென்று சில மாற்றங்களைப் பெற்றுள்ளது. தேர்ப்படையைச் சமயகுரவர் (பிஷப்)என்றும், யானைப்படையைக் கோட்டை (கேஸ்ல்) என்றும் இக்காலத்தில் கூறுகின்றனர்.

சிட்டுக்கு வந்த மடல்கள்

தமிழ்ச்சிட்டு படித்தேன். சிலந்திப்பாட்டு பாடக் கற்றுக் கொண்டேன். நன்றி.

- செ. ஞானப்பிரகாசம்,
இரண்டாம் வகுப்பு, மூங்கம்பட்டி.

குழந்தைகள் படிக்கும் வகையில் எளிய சொற்களைக் கொண்டு மனத்தில் பதியும் வகையில் தமிழ்ச்சிட்டை வெளியிடுவது பாராட்டுக்கு உரியதே.

-செ. கோவிந்தராசன், திருச்சி -21.

மழைமொழிகள் தொடர்ந்து பொழியட்டும். தமிழ்ச்சிட்டுப்பாடல்கள் என்று ஐயாவின பாடல்கள் அனைத்தையும் தொகுத்து நூலாகக் கொடுங்கள்.

நாங்கள் பள்ளியில் பாடத் தேவையாக இருக்கிறது.

திருக்குறளை ஒரு பக்கக் கதைப் போலச் சொல்லுங்கள். கதையோடு குறளும் நெஞ்சில் பதியும். என் மடலையும் படத்தையும் தமிழ்ச்சிட்டு இதழில் பார்த்து மகிழ்ந்தேன். என்னுடன் படிக்கும் அனைவரிடமும் காட்டிப் பாராட்டு பெற்றேன். பாராட்டுகள் அனைத்தும் தமிழ்ச்சிட்டுக்கே.

தமிழ்ச்சிட்டு அ.கு. தமிழ்மொழி
-இரண்டாம் வகுப்பு, புதுவை- 9.

எறும்பி

பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

முட்டையினின்று வெளிவந்த குஞ்சுகளைப் பார்த்துத் தாய் எறும்பி பேசினாள்:
"மாந்தர்கள் எனப்படுபவர்களைப் பற்றி உங்களுக்குச் சொல்கின்றேன், கேளுங்கள் பிள்ளைகளே! .....

அவர்கள் மலை போலும் உருவமுடைய பூதங்கள்!
அவர்கள் வாழும் பகுதிகளில்
ஏராளமான விலங்குகள் உண்டு!
ஒவ்வொன்றும் பெரிய மலைகள் போல் இருக்கும்
அந்தப் பூதங்களையே எடுத்து விழுங்கும் படியான
விலங்குகளும் அங்கே உண்டு!
ஆனால் அவற்றைக்கூட, தங்கள் அறிவுக்
கூர்மையால் அடக்கி ஆளுகின்றார்கள், அவர்கள்!
அவர்கள் குடியிருப்புகளைப் பற்றி
உங்களுக்குச் சொன்னாலும் புரியாது!
பெரிய பெரிய மலைகளைப் போல், நாற்புறமும்
சுவர்களை எழுப்பிக் கொண்டு அவர்கள் வாழுகிறார்கள்!
எத்தனை வகையான மந்திர தந்திரங்களைக் கற்றவர்கள்
அவர்கள் தெரியுமா?
சூரியனைப் போல் ஒளியை அவர்களால் உடனே
உண்டாக்கிக் கொள்ள முடியும்!
அரிய பெரிய வேலைகளை அவர்களால் செய்ய முடியும்
அவர்கள் அறிவிலும் வலுவிலும் மிகச் சிறந்து விளங்குகின்றார்கள்!
அவர்களை வெல்லவே முடியாது!"
- இவ்வாறு தாய் எறும்பி சொல்வதைக் கேட்ட ஒரு பிள்ளை
எறும்பு,
அஞ்சி, நடுக்கத்துடன்,
"அப்படியானால் அவர்களுக்கிடையில் நாம்
வாழவே முடியாதா?" - என்றது.
"ஏன் முடியாது; எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும்
அவர்கள் நம் எதிரிகள்!
எவ்வளவு சிறியவர்களாக இருந்தாலும்,
நாம் அவர்களைக் கண்டு அஞ்சிப் பின்வாங்கிவிடக் கூடாது!
அவர்கள் நம்மை சாகடிப்பதானாலும்கூட, முடிந்தால், நாம்
அவர்களை நம் வலுக் கொண்ட மட்டும் கடித்துவிட்டுத்தான்
சாகவேண்டும்"- என்று வீறுரை முழங்கினாள் அத் தாய் எறும்பி!

தூய தமிழில் பாடு !

அம்மா சொல்லும் மாடு
அன்னை நிலமே நாடு
சும்மா இருந்தால் கேடு
தூய தமிழில் பாடு!

சிட்டு சிட்டு சிட்டு
சிட்டு உடலோ பட்டு
தீயோர் உறவை வெட்டு
வானில் நிலவோ தட்டு!

குழம்பில் சேர்ப்பது உப்பு
அளவாய்ச் சேர்த்தால் ஒப்பு
அளவுக்கு மிஞ்சினால் துப்பு
அதிகம் சேர்த்தால் தப்பு!

நிலவில் உள்ளதா கடை
பாட்டி சுடுகிறாளா வடை
உலகம் ஏற்குமா இதை
உண்மை புரிந்தால் உதை!

நாய் காக்கும் காவல்
காலையில் கூவும் சேவல்
தாய் மொழி படிக்க ஆவல்
எழுதப் பயன்படும் தூவல்!

குயிலைப் போலப் பாடவா
மயிலைப் போல ஆடவா
மானைப் போல ஓடவா
சேர்ந்து விளையாட வா வா!

பருத்தி வெடித்தால் பஞ்சாகும்
பஞ்சை நூற்றால் நூலாகும்
நூலை நெய்தால் துணியாகும்
துணியை அணிந்தால் அழகாகும்!

தமிழறிவு !

படிப்ப தின்பம்
படிக்க வேண்டும்
படிக்கா திருக்கக்
கூடாது - தாய்மொழியில்
படித்தால் அறிவு
பரவி வளரும்
படிக்கத் தயங்கக்
கூடாது.

முயன்றால் முடியும்
நீள்வினை யாற்று
முயற்சியில் தளரக்
கூடாது - உன்னால்
இயன்ற வரையில்
இன்றே செய்திடு
நாளை என்பது
வேண்டாமே.

காட்டை அழித்துக்
கனிவளம் சிதைத்தால்
கானக் குயிலும்
பாடாது - தமிழ்
நாட்டில் தாய்மொழி
நலிந்திட ஆங்கிலம்
நாவில் தவழ்ந்திடக்
கூடாது.

புதுவை. தமிழ்நெஞ்சன்.

தநா. தலைமை அஞ்சலகத் தலைவர் 655/2000 செ.ப. (ஆர்.என்.) எண்: 8119/63 தென்மொழி
டிஎன். சீப் பிஎம்.சி 655/2000 செ.ப. (ஆர்.என்.) எண்: 8119/63 தென்மொழி இணைப்பு

சொல்லடை

1				6
	2			
		3		
		5		4

இடமிருந்து வலம்

1. சரக்கு ஏற்றிச் செல்லும் வண்டி
2. நெல் ஆராய்ச்சி நிலையம் உள்ள இடம்
3 துணி துவைக்கும் போது இப்படிச் செய்து துவைப்பது நல்லது.
5 இரண்டும் ஒரே அளவுடையது.

வலமிருந்து இடம்

2. இதைப்போல தழைத்து அருகுபோல் வேரோடச் சொல்லி வாழ்த்துவார்கள்.
3. நெல் சேமித்து வைக்கும் கலன்.
4 நன்கு உறுதியாக இருப்பதை இப்படிச் சொல்லுவது உண்டு

மேலிருந்து கீழ்

6. சோழர்களுக்குப் பூம்புகார் இதுவாக விளங்கியது.

கீழிருந்து மேல்

5. தமிழர்களின் விளையாட்டு.

தென்மொழி, சென்னை - 600 005